தெரிவித்து இருக்கிறோம். ஆகவே அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தந்துவிடுவார்களேயானால் இது அமுலுக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, கல்லூரிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் பதவிக்கு எம்.ஏ., பி.எட். பட்டம் படித்தவர்களைத் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, டீ.பி.எட், படித்தவர்களுக்கு உயர்நிலைப்பள்ளியிலும் இடம் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும் இடம் கிடைப்பதில்லை. இந்த நிலைமையிலே அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுயாட்சி பெற்ற கல்லூரிகள்.

* வினா எண் 503— திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளுக்கு சுயாட்சி முறை வழங்குவது எந்த அடிப்படையில் ?

(ஆ) சுயாட்சி பெற்ற கல்லூரிகளுக்கு அரசு விசேஷ உதவி ஏதும் செய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் நிலைபெற்று பல்கலைக் கழகத்துடன் நிரந்தரமான இணைப்பு பெற்ற ஒரு கல்லூரி பல்கலைகழக நாட்குறிப்பேட்டின் இருபத்தாறாம் அத்தியாயம் 9 (எ) விதியின்படி குறிப்பிட்ட பாட வகுப்புக்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட தகுதியுடையதாகிறது.

(ஆ) தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பாக எந்த விதமான மானியக் கொடையையும் வழங்கவில்லை.

கதர், கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண் 504— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). 1980–81–ம் நிதியாண்டில் எவ்வளவு கதர் துணிகள் மற்றும் கைத்தறித்துணிகள் விற்கப்பட்டன ?